| Headline | Help higher education students | | |
|---|---|---|---|
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 09 May 2012 | Color | Black/white |
| Section | News | Circulation | 28,000 |
| Page No | 17 | Readership | 180,000 |
| Language | Tamil | ArticleSize | 185 cm² |
| Journalist | N/A | AdValue | RM 455 |
| Frequency | Daily | PR Value | RM 1,366 |



### உயர்கல்விக்கழக மாணவர்களின் முன்னேற்றத்திற்காக

# 12 உயர்கல்விக் கழகங்களுடன் பெர்னாமா உடன்படிக்கை கையெழுத்து




**படம்: பொன். இந்திராணி**

கோலாலம்பூர், மே 9 –

உயர்கல்வி கழகங்களைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் தொழில் துறை பயிற்சிகளை மேற்கொள்ள வகை செய்திடும் வண்ணம் மலேசிய தேசிய செய்தி நிறுவனமான பெர்னாமா 12 உயர்கல்விக் கழகங்களுடன் உடன்படிக்கை கையெழுத்திட்டது.

மொத்தம் 7 அரசாங்க உயர்கல்விக் கழகங்கள், ஐந்து தனியார் உயர்கல்விக் கழகங்களுடன் நேற்று பெர்னாமா இதன் தொடர்பில் உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. மாரா தொழில்நுட்பக் கழகம்(10), மலேசிய புத்ரா பல்கலைக்கழகம்(5), சுல்தான் ஸைனால் அபிடின் பல்கலைக்கழகம் (5), மலேசிய தேசிய பல்கலைக்கழகம் (5), மலேசிய தொழில்நுட்ப பல்கலைக்கழகம்(5), மலாயா பல்கலைக்கழகம்( 5), வட மலேசிய பல்கலைக்கழகம் ( 10) ஆகிய அரசாங்க உயர்கல்விக் கழகங்களிலும் லிம்கோக்விங் தொழில்நுட்ப உயர்கல்விக் கழகம்(5), கோலாலம்பூர் அடிப்படைவசதி கல்லூரி (5), மல்டி மீடியா காலேஜ் கல்லூரி (5), சிலாங்கூர் தொழில்துறை கல்லூரி (10), மாரா பாலிடெக் கல்லூரி (7) ஆகிய தனியார் உயர்கல்விக் கழகங்களுடன் பெர்னாமா இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. உயர்கல்விக் கழகங்களின் சார்பில் உயர்கல்வி அமைச்சர் டத்தோஸ்ரீ முகமட் காலிட் நோர்டினும் பெர்னாமாவின் சார்பில் அதன் தலைமை நிர்வாகி டத்தோ ஹஸ்னுல் ஹசானும் இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். பெர்னாமா தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் இந்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

Powered by: MediaBanc Be informed